# வேளாண்மை அறிவியல் நிலையம்,
# பேச்சிப்பாறை, கன்னியாகுமரி மாவட்டம்



**<u>கொய் மலர்கள் உற்பத்தி - என் வாழ்க்கையின் வசந்தம்</u>**



| | | |
|---|---|---|
| 1. | பெயர் | திருமதி. எல்.எஸ்.லிட்டில் பிளவர் |
| 2. | கணவர் பெயர் | திரு.ஜி.சி.பெனடிக்ட் அந்தோணி |
| 3. | பாலினம் | பெண் |
| 4. | முகவரி | நாம்பன்விளை வீடு,<br>நித்திரவிளை(P.O) - *629 154*<br>கன்னியாகுமரி மாவட்டம். |
| 5. | தொலைபேசி எண் | *09746421405* |
| 6. | நிலம் மற்றும் நீர் வசதி | ½ ஏக்கர், *2* ஆழ்துளைக் கிணறு |
| 7. | தொழில் நுட்பம் சார்ந்த விவசாயியின் பங்கேற்பு | நாற்றுப்பண்ணை அமைத்து விலைமதிப்புமிக்க செடிகளான யூபோர்பியா, அடினீயம், ஆர்கிட், ட்ரஸீனா, மான்ஸ்டீரா போன்ற தாவரங்களை உற்பத்தி செய்து வருகிறேன். திசு வளர்ப்பு ஆய்வகத்திலிருந்து குடுவையில் உள்ள செடிகளைப் பெற்று கடினபடுத்தி, வளர்த்து, அந்த செடிகளை விற்பனை செய்கிறேன்.<br>கொய்மலர்களான அந்தூரியம், ஹெலிக்கோனியா செடிகளை வளர்த்து மலர்களையும் விற்பனை செய்கிறேன். மேலும், இலை நிறப்பான்களான ட்ரசீனா, மான்ஸ்டீரா, பில்லோடென்ரான் ஆகிய அழகு இலைகளை விற்பனை செய்கிறேன். மேலும், அலங்கார மீன்களையும் வளர்த்து விற்பனை செய்கிறேன். |
| 8. | வெளிப்பாடு | மலர், செடி வளர்ப்பில் *14* பண்ணை மகளிரை ஈடுபடுத்தி செடிகள், கடினப்படுத்தப்பட்ட திசு வளர்ப்பு செடிகள் கொய் மலர்கள், இலைநிறப்பான்கள் , அலங்கார மீன்களை விற்பனை செய்ததன் மூலம் நிகர இலாபம் மாதம் ரூ. *10000*/- முதல் ரூ.*15000*/- வரை பெற முடிகிறது. |
| 9. | விவசாயியின் அனுபவத்தின் மூலமாக கற்றுக்கொள்ளப்பட்ட பாடம் | கொய் மலர்கள், அழகு இலை, செடிகளின் தேவை அதிகரித்து கொண்டே இருப்பதால் இதனை ஒரு லாபகரமான தொழிலாக செய்யலாம். |

## இளம் பண்ணை மகளிரின் வாழ்வில் ஓர் முன்னேற்றம் – வாழை நாரிலிருந்து கைவினைப் பொருட்கள் தயாரித்தல்



| | | |
|---|---|---|
| 1. | பெயர் | திருமதி. ஏ. டாடா மேரி |
| 2. | கணவர் பெயர் | திரு. ஆர். லூயிஸ் |
| 3. | பாலினம் | பெண் |
| 4. | தபால் முகவரி | தென்கடம்புவிளை,<br>கொல்வேல், திருவரம்பு (P.O) - 629 183<br>கன்னியாகுமரி மாவட்டம் |
| 5. | தொலைபேசி எண் | 9843827253 |
| 6. | நிலம் மற்றும் நீர் வசதி | -- |
| 7. | தொழில் நுட்பம் சார்ந்த விவசாயியின் பங்கேற்பு | வாழை நாரிலிருந்து கைவினைப் பொருட்கள் தயாரித்தல் பயிற்சியில் கலந்து கொண்டே நான் தற்போது அறுவடைக்குப்பின் வீணடிக்கப்படும் வாழையின் தண்டுப்பகுதியைப் பதப்படுத்தி விதவிதமான கைவினைப் பொருட்களான தொப்பிகள், பூக்கூடைகள், சுவர் மாட்டிகள், கூடைகள், கைப்பைகள், மிதியடிகள், காலணிகள், மேஜை அலங்காரப் பொருட்கள் செய்து விற்பனை செய்கிறேன். |
| 8. | வெளிப்பாடு | வேலை இல்லா இளம் பண்ணை மகளிரை இத்தொழிலில் ஈடுபடுத்தி பொருட்காட்சிகள்இ உள்ளூர் சந்தைகளில் விற்பனை செய்வதுடன் நார் தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் உதவியுடன் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வருகிறேன்இதன் மூலம் ஆண்டு வருமானமாக ரூ. 40,000/-வரை சம்பாதிக்கிறேன் |
| 9. | விவசாயியின் அனுபவத்தின் மூலமாக கற்றுக்கொள்ளப்பட்ட பாடம் | வீட்டிலிருந்தபடியே இத்தொழிலை செய்யலாம் என்பதால் இது பண்ணை மகளிர் கூடுதல் வருமானம் ஈட்டுவதற்கான ஒரு சிறந்த குடிசைத் தொழிலாகும். |

**இளைஞர்களிடம் வரவேற்பை பெற்றுள்ள தென்னை மரம் ஏறும் கருவி**

| | | |
|---|---|---|
| 1. | பெயர் | திரு. என்.பி. சுரேஷ்  |
| 2. | கணவர் பெயர் | திரு. நேவிஸ் |
| 3. | பாலினம் | ஆண் |
| 4. | முகவரி | **37**, கப்ரியேல் தெரு,<br>இராஜாவூர்<br>குமாரபுரம் தோப்பூர் (P.O) - **629 402**<br>கன்னியாகுமரி மாவட்டம் |
| 5. | தொலைபேசி எண் | **9443872350** |
| 6. | நிலம் நீர் வசதி | -- |
| 7. | தொழில் நுட்பம் சார்ந்த விவசாயியின் பங்கேற்பு | எங்கள் மாவட்டத்தில் ஆள் பற்றாக்குறை காரணமாக முதிர்ச்சியடைந்த தேங்காய்களை அறுவடை செய்ய இயலாததுடன் உரிய நேரத்தில் அறுவடை பாதிக்கப்படுவதால் மகசூல் இழப்பும் ஏற்பட்டு வந்தது. தென்னைமரம் ஏறும் கருவி மூலம் தேங்காய் அறுவடை செய்வது பற்றிய பயிற்சி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பெற்று, சுய தொழில் மூலம் வருமானம் ஈட்டுவதற்காக தென்னைமரம் ஏறும் கருவி ஒன்று வாங்கினேன். |
| 8. | வெளிப்பாடு | மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு குழுக்களாக சென்று தேங்காய்களை அறுவடை செய்து வருமானம் ஈட்டி வருகிறேன். **12** வேலை இல்லாத இளைஞர்களைக் கொண்டு மூன்று குழுக்களை அமைத்து இத்தொழிலில் ஈடுபட்டு வருகிறேன். ஒரு மரம் ஏற ரூ.**15** முதல் ரூ.**20** வரை வசூல் செய்து ஒரு நாளைக்கு ரூ.**1000** முதல் ரூ.**1500** வரை சம்பாதிக்கிறோம். |
| 9. | விவசாயியின் அனுபவத்தின் மூலமாக கற்றுக்கொள்ளப்பட்ட பாடம் | குமரிமாவட்டத்தில் வேலை இல்லாத இளைஞர்களுக்கு ஏற்ற சிறந்த சுய தொழிலாகும். |